# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

### நிருவாகப் பதவியணி - நிரந்தர வகுதி

### ரத்மலான வளாகம்

1) உதவிப் பதிவாளர் பதவி
2) உதவிப் பதிவாளர் பதவி (சட்ட மற்றும் ஆவணமாக்கல்)

### சூரியவெவ தென் பல்கலைக்கழகம்

3) உதவித் தனாதிகாரிப் பதவி

<u>**தகைமைகள், தகுதி மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை**</u>

1) உதவிப் பதிவாளர் பதவி

<u>வெளிவாரி விண்ணப்பதாரர்கள்</u>

(a) அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து / உயர் கல்வி நிறுவகத்திலிருந்து முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடன் ஒரு இளமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(b) அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து / உயர் கல்வி நிறுவகத்திலிருந்து நிருவாகத்தில் / முகாமைத்துவத்தில்** ஒரு பட்டப்பின்படிப்புப் பட்டத்துடன் அல்லது பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பட்டத்துடன் ஒரு இளமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

வயதெல்லை: இருபத்திரெண்டு (22) வயதுக்குக் குறையாமலும் முப்பது (30) வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்.

<u>உள்ளக விண்ணப்பதாரர்கள்</u>

(a) அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து / உயர் கல்வி நிறுவகத்திலிருந்து ஒரு இளமானிப் பட்டத்தை பெற்றுள்ள KDU இல் தற்போதைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு ஊழியர்.

அல்லது

(b) KDU இன் U-MN-1 (II) / U-MT1 (II) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஒரு பதவியை அல்லது அதற்கு உயர்ந்த ஒரு பதவியை வகிக்கும் அந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர்.

வயதெல்லை: ஐம்பத்து மூன்று (53) வயதுக்கு மேற்படாதிருத்தல்.

**

- பொது/வணிக நிருவாகம்
- முகாமைத்துவம்
- பொதுக் கொள்கைகள்
- மனித வளங்கள் முகாமைத்துவம்
- பொருளியல்
- சட்டம்
- நிதி முகாமைத்துவம்
- கருத்திட்டத் திட்டமிடுகை மற்றும் முகாமைத்துவம்
- தகவல் தொழில்நுட்பம் அல்லது
- முகாமைத்துவத்தின்/நிருவாகத்தின் ஒரு விஷேட பிரிவு அடங்கிய ஏனைய பிற துறை

2) உதவிப் பதிவாளர் (சட்டம் மற்றும் ஆவணமாக்கல்)

1. சட்டத்தகைமைகளை பெற்ற பின்னர் நீதிமன்றத் தொழில், சட்டத் தொழில் மற்றும் ஒரு அரசாங்க நிறுவனத்தில் / கூட்டுத்தாபனத்தில் அல்லது பிரசித்த தனியார் துறை நிறுவனத்தில் அல்லது அலுவலக சட்டமன்றத்தில் சட்ட ஆவணங்களை தயாரிப்பதில் பெற்ற இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவத்துடன் சட்ட / சட்டக் கற்கைப் பட்டத்தை உடைய ஒரு சட்டத்தரணி.

அல்லது

2. மேற்குறித்த தகைமைகளை பெற்ற பின்னர் நீதிமன்றத் தொழில், சட்டத் தொழில் மற்றும் ஒரு அரசாங்க நிறுவனத்தில் / கூட்டுத்தாபனத்தில் அல்லது பிரசித்த தனியார் துறை நிறுவனத்தில் அல்லது அலுவலக சட்டமன்றத்தில் சட்ட ஆவணங்களை தயாரிப்பதில் பெற்ற மூன்று (02) வருடங்களுக்கு குறையாத அனுபவத்துடன் சட்ட / சட்டக் கற்கைப் பட்டத்தை உடைய ஒரு சட்டத்தரணி.

3) உதவித் தனாதிகாரிப் பதவி

<u>வெளிவாரி விண்ணப்பதாரர்கள்</u>

1. இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை II இல் அல்லது அதற்கு இணையான ஒரு பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

2. (a) (i) அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து / உயர் கல்வி நிறுவகத்திலிருந்து ஒரு கணக்கியலில் விஷேட இளமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இடை மட்டப் பரீட்சையில் அல்லது அதற்கு இணையான ஒரு பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து / உயர் கல்வி நிறுவகத்திலிருந்து ஒரு இளமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iii) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) அல்லது அதன் வாரிசு நிறுவனத்தின் கணக்கியலில் ஒரு தேசிய உயர் டிப்ளோமா (HNDA) பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

(b) ஒரு அரசாங்க நிறுவனத்தில் / அரச கூட்டுத்தாபனத்தில் அல்லது பிரசித்த தனியார் துறை நிறுவனத்தில் கணக்கியலில் / கணக்காய்வில் இரண்டு (02) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

வயதெல்லை: வயதெல்லை: இருபத்திரெண்டு (22) வயதுக்குக் குறையாமலும் முப்பது (30) வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்.

<u>உள்ளக விண்ணப்பதாரர்கள்</u>

1. (a) அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து / உயர் கல்வி நிறுவகத்திலிருந்து கணக்கியலை ஒரு பாடமாக உள்ளடக்கிய ஒரு இளமானிப் பட்டத்துடன் KDU இன் தற்போதைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு ஊழியர்.

அல்லது

(b) KDU இன் U-MN-1 (II) / U-MT1 (II) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஒரு பதவியை அல்லது அதற்கு உயர்ந்த ஒரு பதவியை வகிக்கும் அந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர்.

2. KDU இன் அல்லது உயர் கல்வி நிறுவகத்தில் நிதி / கணக்காய்வு பிரிவில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

வயதெல்லை: ஐம்பத்து மூன்று (53) வயதுக்கு மேற்படாதிருத்தல்.

**தகுதி மீதான மட்டுப்பாடுகள்**:

(a) ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நடத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையில் வெளிவாரி அல்லது உள்வாரி வகுதியின் கீழ் இரண்டு (02) அமர்வுகளுக்கு மேல் எந்தவொரு பரீட்சாத்தியும் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(b) எவரேனும் உள்வாரிப் பரீட்சாத்தி உள்வாரி மற்றும் வெளிவாரி ஆகிய இரண்டு வகுதிகளுக்கும் தகுதி உடையவராக இருந்தால், அவர் எழுத்துமூலப் பரீட்சையில் உள்வாரி வகுதியின் கீழ் இரண்டு (02) அமர்வுகளுக்கும் வெளிவாரி வகுதியின் கீழ் இரண்டு (02) அமர்வுகளுக்கும் என்ற அடிப்படையில் நான்கு (04) அமர்வுகளுக்கு தோற்ற அனுமதிக்கப்படுவார்.

(c) எவரேனும் ஆளொருவர் ஏதேனும் மதத்தில் மதகுருவாக இருப்பாராயின் அவர் ஆட்சேர்ப்புக்கான எழுத்துமூலப் பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை**:

ஒவ்வொரு வகுதியின் கீழும் உள்ள எல்லா விண்ணப்பதாரர்களும் பின்வருமாறு அந்தந்த வகுதிகளுக்கு ஏற்புடைய உரிய விடயப் பிரிவை உள்ளடக்குகின்ற ஒரு எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைவதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள்.

1) உதவிப் பதிவாளர் பதவி

<u>வெளிவாரி வகுதி</u>

1. IQ மற்றும் தர்க்கம்*
2. முகாமைத்துவத் திறன்கள்*
3. ஆங்கில மொழி (இரண்டு வகுதிகளுக்கும் பொது)

<u>உள்வாரி வகுதி</u>

1. பல்கலைக்கழக முறைமை பற்றிய சட்டம்*
2. பொது நிருவாகம் மற்றும் நிதி நடைமுறைகள்*
3. ஆங்கில மொழி (இரண்டு வகுதிகளுக்கும் பொது)

*வினாத்தாள்கள் ஆங்கில மொழியில் காணப்படும்.

2) உதவிப் பதிவாளர் (சட்டம் மற்றும் ஆவணமாக்கல்)

1. IQ மற்றும் தர்க்கம்*
2. சட்டம்*
3. ஆங்கில மொழி

*வினாத்தாள்கள் ஆங்கில மொழியில் காணப்படும்.

3) தனாதிகாரிப் பதவி

<u>வெளிவாரி வகுதி</u>

1. IQ மற்றும் தர்க்கம்*
2. கணக்கியல் மற்றும் நிதி*
3. ஆங்கில மொழி (இரண்டு வகுதிகளுக்கும் பொது)

<u>உள்வாரி வகுதி</u>

1. பல்கலைக்கழக முறைமை பற்றிய சட்டம்*
2. கணக்கியல் மற்றும் நிதி நிருவாக நடைமுறைகள்*
3. ஆங்கில மொழி (இரண்டு வகுதிகளுக்கும் பொது)

*வினாத்தாள்கள் ஆங்கில மொழியில் காணப்படும்.

**சம்பள அளவுத்திட்டங்கள்**

- **உதவிப் பதிவாளர் பதவி, உதவித் தனாதிகாரிப் பதவி மற்றும் உதவிப் பதிவாளர் (சட்டம் மற்றும் ஆவணமாக்கல்)** :-

  U-EX I (II) ரூ. 50,625 - 3x1,125 - 54,000 (EB) 55,335; 12x1,335 - 71,355 p.m. + (ரூ. 17,800 வாழ்க்கைப்படி + ரூ. 5,000 மாதாந்தக் கொடுப்பனவு + 45% MCA + 20% மேலதிகக் கொடுப்பனவு)

**ஆட்சேர்ப்பு முறை:**

ஒரு பொதுஉளர்சார்பு பரீட்சையில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் கட்டமைந்த ஒரு நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.